### தொலைதூரக் கல்வியால் எனக்குப் பாடம் நடத்திய

# திராவிடர் துணைவேந்தர் அண்ணன் முரசொலி செல்வம்!



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பவள விழா சிறப்பு நிகழ்ச்சி கோவை செம்மொழி மாநாடு போன்ற ஒரு சில நிகழ்வுகளில் மட்டுமே அவரிடம் நேரடியாக சந்தித்து உரையாடி இருக்கிறேன் மற்ற அனைத்தும் தொலைபேசியிலும் அலைபேசியிலும் பேசித்தான் அவரது வழிகாட்டுதல்களை பெற்றிருக்கிறேன்.

“அன்பு செல்வம்
ஆசை செல்வம்
இன்முக செல்வம்
ஈகை செல்வம்
உறுதியான செல்வம்
ஊக்கம் தரும் செல்வம்
எளிமையான செல்வம்
ஏற்றம் மிகு செல்வம்
ஐயம் தீர்க்கும் செல்வம்
ஒன்றுபடுத்தும் செல்வம்
ஓங்கு புகழ் செல்வம்
அஃதே அண்ணன் முரசொலி செல்வம்.”

கலைஞர் என் ஞானத்தந்தை, அதனால் அவரை மாமா என்று அழைத்தேன். மறுக்கவில்லை, மலைத்துபோனார்! ஐயா என்றழைத்தேன், அசரவில்லை, அதிர்ந்து போனார் !

அண்ணன் என்று அழைத்தேன், அழகாய் சிரித்தார்! அதுவே சரி என்றார் “அண்ணா” என்பது தி.மு. கழகத்தின் உறவு பாலத்தை உறுதி செய்யும் சொல் என்றார்! அன்று முதல் அண்ணாவானார் எனக்கு.

நான் தி.மு.க.வின் பலதரப்பட்ட தொண்டர்களை பல ஊர்களில் சந்தித்து இருக்கிறேன். அ.தி. மு.க.வில் உள்ள உயர் மட்டத் தலைவர்கள், தொண்டர்கள் மற்றும் பா.ம.க., பா.ஜ.க.,வி.சி.க., பொதுவுடமை இயக்கத் தலைவர்கள் பலரை சந்தித்து இருக்கிறேன். அண்ணன் முரசொலி செல்வத்தைப் பற்றி பேசியிருக்கிறேன். ஒருவர் கூட அவரைப்பற்றி எதிர்மறையான கருத்துகளை கூறவில்லை.அனை வரும் அவரை நல்ல மனிதர், Mr பர்ஃபெக்ட் ஜென்டில்மேன் என்ற சொற்றொடர்களைத் தான் பயன்படுத்தினர்.

தி.மு.கழகத்தில் அவர் ஆற்றிய பணிகளுக்கும் அனுபவத்திற்கும் தலைவர்களுடன் அவரது நெருக்கமான உறவிற்கும் அண்ணா காலத்திலிருந்து அவரது உறுதியான ஈடுபாட்டிற்கும் அவர் நினைத்திருந்தால், விரும்பியிருந்தால், ஒன்றிய அமைச்சர்,மாநில அமைச்சர், சட்டப்பேரவை தலைவர் போன்ற மதிப்புமிகு பதவிகளை பெற்று மகிழ்ந்திருக்கலாம். ஆனால் தந்தை பெரியாரைப் போல்திராவிடத்தை, தன்மானத்தை, பகுத்தறிவை தன் சீரிய எழுத்துக்களால் மக்களிடம் கொண்டு செல்வதையே பெரும் பதவியாக நினைத்து வாழ்ந்தவர்.

என்னைவிட அவர் ஏறத்தாழ 20 வயது மூத்தவர். ஆனால், எப்போதும் எந்த இடத்தில் சந்தித்தாலும் எழுந்து நின்று அழகான புன்னகை செய்து கைகளை பற்றி கொண்டு பேசும் அவரது பண்பு பகைவரையும் கவர்ந்திழுக்கும் . அவரிடம் நான் கற்றுக் கொண்டவை பதவி, புகழ், பெருமை ஆகியவற்றை துச்சம் என நினைத்து பணியாற்றுதல்.

எல்லோருக்கும் நன்றாம் பணிதல் மற்றும் எப்போதும் எல்லோரிடத்தும் இனிமையாக பழகும் குணங்கள்.

எனது பட்டிமன்ற ஒலி,ஒளிநாடாக்களை அனைத்தையும் விரும்பி கேட்கும் எனது பாசமிகு ரசிகர்களில் உயர்ந்த இடத்தில் உள்ளவர்.

எனது பயணங்களில் ஏற்படும் களைப்பும் மனசோர்வும் உங்களின் நகைச்சுவை பேச்சால் என்னை விட்டு ஓடி போகும் என்று பாராட்டுவார்.

நான் முரசொலியில் எழுதும் “சிலந்தி” கட்டுரைகளுக்கு உங்களின் நகைச்சுவையும் நையாண்டியும் பெரிதும் பயன்பட்டுள்ளது என்று அவர் கொடுத்த பாராட்டு ‘பத்மஸ்ரீ’ விருதை விட பெருமைக்குரியது.

எனது பொதுக்கூட்ட உரைகளில், தேர்தல் பரப்புரைகளில் மற்றவர்களின் மனம் புண்படும்படி பேசினால் உடனே தொலைபேசியில் அழைத்து மென்மையாக கண்டிப்பார். எனது பேச்சில் நான் பேசும் கருத்துகள் கற்பனையுடன் நான் பயன்படுத்துவதை உடனடியாக பாராட்டுவார் அம்மையார் ஜெயலலிதாவின் மறைவுக்கு பின் திருமதி சசிகலாவை எல்லோரும் சின்னம்மா என்று காலில் விழுந்து கொண்டிருந்தபோது நான் மேடையில் கூறிய உவமையை வெகுவாக பாராட்டினார்.

“ஒரு சாமி சிலையை எல்லோரும் சாமி சாமி என்று அதன் அடியில் விழுந்து விழுந்து கும்பிட்டு கொண்டு இருந்தனர். அந்த சாமி சிலை ஒரு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உடைந்து நொறுங்கி விட்டது. கும்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தனர்.

அந்த சாமிக்கு பின்னால் பல ஆண்டுகளாக சும்மாவே கிடந்த வெறுங் கல்லை அடையாளம் இட்டு சின்னசாமி என்று அழைத்து அதன் அருகில் விழுந்து கும்பிட ஆரம்பித்தனர்.” இதுதான் சின்னம்மா என்று நான் மேடையில் பேசியது சமூக வலைதளங்களில் வைரலாகி பெரும் வரவேற்பு பெற்றது. அந்த கற்பனையை மிகவும் ரசித்து என்னை பாராட்டினார்.

அப்போதே என்னை முரசொலிக்கு நீங்கள் உங்கள் கருத்துக்களை எழுதுங்கள் என்று ஆலோசனை சொன்னார். இதுவரை நான் அதை கடைப்பிடிக்க வில்லை. இனிமேல் நான் முரசொலிக்கு எனது சிந்தனைகளை எழுதுவது என்று முடிவெடுத்துள்ளேன்.

இதேபோல் ஒரு கிராமத்து தாய் கடவுளிடம் தன் மகளின் உயர்கல்விக்கு பணம் கேட்டு கைமாத்தாக பத்தாயிரம் கேட்டார்.

அதற்கு உண்டியல் பணத்தை எண்ணி எடுத்துக் கொள்வர் என்னிடம் பணம் தரவில்லை என்று சாமி மைண்ட் வாய்ஸில் சொன்னது.

அதைக் கேட்ட அந்தப் பெண் சாமியோட நிலைமையே இப்படி இருக்குது என்று வேதனையில் திரும்பியபோது திராவிடமாடல் முதல்வரின் “புதுமைப் பெண்” திட்டத்தின் மூலம் பயன்பெற்றார். கடவுள் செய்ய முடியாததை திராவிடம் செய்யும் என்ற நிகழ்வை நான் மேடையில் நடித்துக் காட்டி ரசித்து சிரித்து மகிழ்ந்து பாராட்டினார்.

தொலைபேசியில் ஒரு முறை தந்தை பெரியார் பற்றிய கருத்துக்களை மேடையில் கூறும்போது பெரியாரிடம் கைத்தடிக்கு பதிலாக ஏ.கே.47 ரக துப்பாக்கி இருந்திருந்தால் இந்நேரம் சனாதனத்திற்கு சமாதி கட்டியிருப்பார் என்று பேசினேன்.

அந்த பேச்சினை சமூக வலைதளங்கள் மூலம் கேட்டுவிட்டு எனக்கு பக்குவமாக அறிவுரை வழங்கினார். தந்தை பெரியார் ஆயுதம் ஏந்தி போராடுவதில் நம்பிக்கை அற்றவர். அவர் மீது செருப்பு எறியப்பட்ட போது கூட இன்னொரு செருப்பு எங்கே என்று கேட்டார் எவர் மீதும் செருப்பை எறியவில்லை.

பகுத்தறிவு,தன்மானம்,சமூக நீதி ஆகிய கொள்கைகள் தான் பெரியாரின் ஆயுதங்கள் அதை அவரது பாணியில் வலிமையாக பயன்படுத்தினார். உயிர்களை அழிக்கும் தீவிரவாதி அல்ல அவர்.

அனைவரையும் சமத்துவமாக வாழ வைத்த புரட்சியாளர் என்று எனது பேச்சினை திருத்தி வழிகாட்டினார். அதுவும் தொலைபேசியில்தான்.

தேர்தல் பரப்புரைகளுக்கு செல்லும்போது அவரது கட்டுரைகள் தான் என் பேச்சுக்கு ஆதாரம் . தமிழ்நாட்டு பாட நூல் தலைவராக நான் பொறுப்பேற்ற போது அவரை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் இதுவரை இல்லாமல் முதன்முறையாக இந்த பெரிய பொறுப்பில் நீங்கள் தமிழக முதல்வர் அவர்களால் அமர்த்தப்பட்டு இருப்பது மிகவும் பெருமைக்குரியது என்று அந்தப் பொறுப்பின் மேன்மையை எனக்கு உணர்த்தினார்.

எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் திராவிட தலைவர்களின் சிந்தனைகளையும் அவர்களது மக்கள் பணிகளையும் மாணவர்களுக்கு பாடத்திட்டத்தில் பக்குவமாக கொண்டு வர முயற்சி செய்யுங்கள். பாடத்திட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானது அதில் எதையும் நாம் வலிந்து திணிக்கக் கூடாது என்கிற உயரிய வழிகாட்டுதலை வழங்கினார்.

மேலும் எங்கள் பாட நூல் வெளியிட்டு பிரிவில் நாங்கள் வெளியிட்ட அண்ணாவின்
மாபெரும் தமிழ் கனவு ,
கலைஞரின் குறளோவியம்,
தந்தை பெரியாரின் சிந்தனைகள்
ஆங்கில மொழிபெயர்ப்பு
நூல்களை அவரிடம் வழங்கி மகிழ்ந்தேன்.

கலைஞர் அவர்களால் ‘மாணவன் நேசன்’ என்று கையெழுத்து பிரதியாக ஆரம்பிக்கப்பட்டு “முரசொலி” என்ற ஆலமரமாக வளர்ந்து சிந்தனைகளின் தொகுப்பாக அனைத்துத் தரப்பு மக்களால் வாசிக்கப்படும் நாளிதழாக வளர்க்க அயராது உழைத்தவர் அன்பு அண்ணன் முரசொலி செல்வம் அனைவருக்கும் வழிகாட்டி அவர் .

முரசொலிசெல்வம் அவர்களின் சுவாசக்காற்று கொள்கைகளாக சிந்தனை மிகுந்த கருத்துகளாக முரசொலி அலுவலகத்தில் மட்டுமல்ல; மக்களின் எண்ணங்களில் தொடர்ந்து உலா வரும்.

ஞாலத்தை வென்றவன் நீ
ஞானியாக நிலைத்தவன் நீ
உள்ளத்தில் இருக்கும் நினைவாக
ஊருக்கு தெரியாத உறவாக
என்னோடு தி.மு.கழகத்தின் தொண்டர்களின் உள்ளங்களில் என்றும் நீ வாழ்கிறாய். ●



திண்டுக்கல்
ஐ.லியோனி
கழகக் கொள்கை பரப்புச் செயலாளர்
(தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர்)



நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு ஒன்றியம் புது புளியம்பட்டியைச் சார்ந்த அ.தி.மு.க. ஊராட்சி மன்றத் தலைவர் செல்வகுமார், துணைத் தலைவர் சந்திரன், கிளை நிர்வாகிகள் செல்வகுமார், சுப்பிரமணி, செங்கோட்டையன், செல்வம், ராசாத்தி, சாந்தி, மஞ்சு உட்பட 100 பேர் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில், மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில், ஒன்றியக் கழகச் செயலாளர் வட்டூர் ஜி.தங்கவேல் ஏற்பாட்டில் அ.தி.மு.க.வில் இருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தனர். அவர்களை மாவட்டக் கழகச் செயலாளர் வரவேற்று சால்வை அணிவித்தார். ஒன்றிய பெருந்தலைவர் சுஜாதா தங்கவேல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன், நகர் மன்றத் தலைவர் நளினி சுரேஷ் பாபு, நகரக் கழக செயலாளர் கார்த்திகேயன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# தமிழ்நாட்டில் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்களைத் தொடங்க வேண்டும்!

## ஒன்றிய அமைச்சருக்கு கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

*சென்னை, அக்.18-*

*தமிழகத்தில் ஒன்றிய அரசின் சார்பில் விண்வெளி ஆராய்ச்சி மற்றும் மேலாண்மைக் கல்வி நிறுவனங்களைத் தொடங்கக்கோரி வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி. ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களுக்கும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் அவர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளார்.*

*அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-*

*சென்னை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஆனந்தகுமார் சூசைமாணிக்கம் அவர்கள் தமிழகத்தில் ஒன்றிய அரசின் சார்பில் முதுநிலை ஆராய்ச்சி கல்லூரிகளை துவங்க வேண்டும் என்று கோரி என்னிடம் ஒரு மனுவினை கொடுத்துள்ளார்.*

*அம் மனுவில் தமிழ்நாட்டிலும், கேரளத்திலும் அய். அய். டி. தேசிய கணக்கியல் கல்வி நிறுவனம் என்.அய். டி. மத்திய பல்கலைக்கழகம் முதலானவை அமைக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமின்றி கேரளத்தில் விண்வெளி ஆராய்ச்சி கல்வி நிறுவனம் மேலாண்மைக் கல்வி நிறுவனம் என பல்வேறு மத்திய கல்வி நிறுவனங்கள் உள்ளன என்று குறிப்பிட்டிருந்தார்.*

*இந்நிலையில் தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் குலசேகரப்பட்டினத்தில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் சமீபத்தில் செயற்கைக்கோள்களை விண்வெளியில் செலுத்தும் நிலையை துவங்கியுள்ளது. அங்கு இந்திய மாணவர்களை விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபட வாய்ப்பு அளிக்கும் வகையில் இந்திய செயற்கைக் கோள் ஆராய்ச்சி கல்வி நிறுவனம் ஒன்றைத் துவங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அதன் மூலம் மாணவர்களுக்கு செயற்கைக் கோள்கள் மற்றும் விண்வெளி ஆராய்ச்சி முதலானவற்றில் ஈடுபட வாய்ப்பு கிடைக்கும்.*

*தமிழகத்தில் ஆண்டு தோறும் சுமார் 1,50,000 மாணவர்கள் பொறியியல் பட்டப்படிப்பு படிப்பதற்காக பொறியியல் கல்லூரிகளில் சேர்கின்றனர். இந்த ஆண்டு தமிழ்நாட்டில் உள்ள இன்ஜினியரிங் கல்லூரிகளில் சேர்வதற்காக தமிழ்நாடு அரசின் தொழில்நுட்ப இயக்குநகரத்திற்கு சுமார் 1,42,867 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.*



*எனவே குலசேகரப்பட்டினத்தில் ஒன்றிய அரசு விண்வெளி ஆராய்ச்சி கல்வி நிறுவனத்தை உருவாக்கினால் மிக அதிக அளவில் மாணவர்கள் இக்கல்வி நிறுவனத்தில் சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்பு உண்டாகும்.*

*அதேபோன்று தமிழகத்தில் ஏதாவது ஒரு பகுதியில் இந்திய மேலாண்மை கல்வி நிறுவனம் அதாவது அய்.அய்.எம் கல்லூரியையும் துவங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.*

*இதன் மூலம் தமிழகத்தில் சிறந்த கல்வி நிறுவனங்கள் உருவாகி மாணவர்களுக்கு சிறந்த கல்வி கிடைப்பதற்கான வாய்ப்புகளும் உருவாகும்.*

*இவ்வாறு டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி அக்கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார்.*



சோழிங்கநல்லூர் தொகுதி சென்னை மாநகராட்சி மண்டலம் 14ல் உள்ளடங்கிய வார்டு எண்கள் 189 மற்றும் 190 பள்ளிக்கரணை பகுதியில் வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களை சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ வழங்கினார். உடன் மண்டலம் 14 கண்காணிப்பு அலுவலர் மகேஷ்வரி ரவிக்குமார், சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி செயலாளர் 4 வது மண்டல குழு தலைவர் எஸ்.வி. ரவிச்சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் வ.பாபு, சிவபிரகாஷ், மண்டலம் 14 உதவி ஆணையர் உள்ளிட்ட மாநகராட்சி அலுவலர்கள் வட்ட செயலாளர் எஃப்.ஆரோன் (எ) அரசு, பகுதி துணைச் செயலாளர் வி.வி..குமரேசன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# வேலூரில் பா.ம.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

*வேலூர், அக். 18 -*

*வேலூர் மாநகரம் காந்தி நகர் பகுதி செயலாளர் என். பரமசிவம் தலைமையில் பா.ஜ.க. செயற்குழு உறுப்பினர் ஆர்.ஏழுமலை உடன் 10 பேர் பா.ஜ.க.வில் இருந்து விலகி கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி தலைவர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.*

*அவர்களுக்கு கழக துண்டு அணிவித்து மக்கள் பணியாற்றிட வாழ்த்தினார். உடன் வட்ட கழக செயலாளர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.*

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஒரத்தநாடு மு.காந்தி
## அக்டோபர் 18 (2020)



**இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றத் தொடங்கியவர்.**

**ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், ஒன்றிய துணைச்செயலாளர் என படிப்படியாக பொறுப்பு வகித்து 2014 முதல் தனது இறுதிகாலம் வரை ஒரத்தநாடு ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**புதூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – ஒரத்தநாடு ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**“கொம்பு சீவி விட்ட காளை போல் சீறிப் பாய்ந்து கழகப் பணியாற்றியதால், கழகத் தொண்டர்களின் பேரன்பைப் பெற்றவராக திகழ்ந்தார்” என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, அதனை முன்னெடுத்து சிறப்பாக நடத்திக் காட்டியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**